# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 09 /பேரூ/2024**
**நாள் : 19.08 .2025**

திரு. S. பிரபு (எ) பிரபுகுமார்,
மேச்சேரி,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி அஞ்சல், குக்கல்பட்டி காட்டுவளவு என்ற முகவரியை சேர்ந்த திரு. S. பிரபு (எ) பிரபுகுமார் என்பவரது 20.05.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.05.2024 அன்று பெறப்பட்டு, 09/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி அஞ்சல், குக்கல்பட்டி காட்டுவளவு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. S. பிரபு (எ) பிரபுகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய தனது 20.05.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"நான் 2020-21ஆம் ஆண்டில் மேச்சேரி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பேருந்து நிலைய காலியிட கடை எண். 20 மற்றும் 21 ஆகிய கடைகளை குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறேன். இந்நிலையில் 01.04.2020 முதல் 30.09.2020 வரை கொரோனா காரணமாக கடை நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. அதனை முன்னிட்டு 2020ல் அரசு இரு மாத குத்தகையை தள்ளுபடி அறிவித்திருந்தது. தற்பொழுது மேலும் 2020 ஜூன் முதல் ஆகஸ்ட் வரை 3 மாதங்கள் மற்றும் 2021 மே, ஜூன் ஆகிய இரண்டு மாதங்கள் அரசு குத்தகை தள்ளுபடி செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து நான் பேரூராட்சி அலுவலகத்தில் பல மாதங்களாக

தள்ளுபடி தொகை குறித்த விபரம் உரிய துறை உயர் அதிகாரிகளிடமிருந்து தகவல் வந்துள்ளதா என விசாரித்த பொழுது நாளது தேதி வரை எங்களுக்கு எவ்வித தகவலும் இல்லை என பேரூராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நான் அரசு வெளியிட்ட அரசாணை நிலை எண். 337/16.06.2023 இணைத்து எனக்குரிய கடைகளுக்கு வரவேண்டிய தள்ளுபடி தொகை வழங்க வேண்டி விண்ணப்பம் செய்திருந்தேன். ஆனால் செயல் அலுவலர் அவர்கள் ஏதோ பிரதிபலன் எதிர்பார்த்து உள்நோக்கத்துடன் எனக்குரிய 5 மாத தள்ளுபடி நிவாரணத் தொகையை வழங்காமல் தேவையற்ற காலதாமதம் செய்து எனக்கு வருவாய் இழப்பு மற்றும் மன உளைச்சலை ஏற்படுத்தி வருகிறார். அரசு வெளியிட்ட அரசாணை நிலை எண். 337/16.06.2023-ல் உரிய நிவாரணம் தமிழகம் முழுவதும் உள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் கடைகள், கழிப்பிடம், வார சந்தை, தினசரி மார்கெட், ஆடு அடிக்கும் கசாப்பு போன்ற இனங்களை ஏலம் எடுத்து நடத்தியவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வழிவகை செய்து உத்தரவு பிறப்பித்து அதனை நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர், உதவி இயக்குநர் மூலம் அனைத்து நகராட்சி, பேரூராட்சி அலுவலகங்களுக்கு அரசாணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி தகவலை சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு எண். W.P.16511/2021 தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. அவ்வாறு நீதிமன்றத்தில் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்ட அரசாணையில் உள்ளபடி எனக்கு மற்றும் இன்னும் பல மேச்சேரி பேரூராட்சி பகுதியில் கடை நடத்தி வரும் அனைவருக்கும் உரிய 5 மாத குத்தகை நிவாரண தள்ளுபடி தொகையை வழங்க மறுத்து மேற்படி நீதிமன்ற உத்தரவு மற்றும் அரசு வெளியிட்ட அரசாணையையும் மதிக்காமல் மேச்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் எதேச்சதிகாரமாக செயல்பட்டு வருகிறார். எனவே தாங்கள் என் மனுவினை பரிசீலித்து பேரூராட்சி செயல் அலுவலரை உரிய பதிவேடுகளுடன் விசாரணை செய்து நீதிமன்ற அவமதிப்பு செய்துள்ளதை அவர் சார்ந்த துறை இயக்குநருக்கு உரிய முறையில் தெரியப்படுத்தி செயல் அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அதனை அவரது பணிப்பதிவேட்டில் குறிக்கும்படி உரிய உத்தரவுகளை பிறப்பித்து எனக்குரிய 5 மாத நிவாரண தொகையை உடனே பெற்று வழங்கி உதவிடும்படி மிகவும் பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 15.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் மேச்சேரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. மேச்சேரி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. தி. சோமசுந்தரம் என்பவர் தனது 21.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 376/2024-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

சேலம் மாவட்டம், மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய காலியிட கடை எண். 20 மற்றும் 21 ஆகியவற்றினை இறுதியாக 2009-2010ஆம் ஆண்டு ஏலம் விடப்பட்டது. மேற்படி கடையினை ஒவ்வொரு மூன்று ஆண்டுக்கு ஒரு முறை ஆண்டு வாடகையில் 15 சதவீதம் உயர்த்தி புதுப்பித்து வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி கடையினை வாடகைக்கு எடுத்துள்ள திரு. எஸ். பிரபு (எ) பிரபுகுமார் என்பவர் கொரோனா காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான ஏலம்/குத்தகை இனங்களுக்கு தள்ளுபடி செய்துள்ளதை குறிப்பிட்டு, தங்களால் நடத்தப்பட்டு வரும் கடை குத்தகையினத்திற்கும் பேரூராட்சி நிர்வாகம் தள்ளுபடி செய்துதர வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அரசாணை (டி) எண். 298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 02.09.2020ன்படி, மேற்படி குத்தகைதாரருக்கு 2020-2021ஆம் ஆண்டில் கொரோனா பேரிடர் காலத்திற்கு மாத வாடகையில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள 2 மாதங்களுக்கு மட்டும் வாடகை தொகையினை தள்ளுபடி செய்தும் மற்றும் அரசாணை (டி) எண். 337, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 16.06.2023ன்படி, 2021-2022ஆம் ஆண்டிற்கு கொரோனா பேரிடர் காலத்திற்கு 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் 5 மாதங்களுக்கு (01.06.2020 முதல் 31.08.2020 வரை மற்றும் 01.05.2021 முதல் 30.06.2021 வரை) வாடகை தொகையினை தள்ளுபடி செய்ய தெரிவிக்கப்பட்டதின்படி, மேற்படி குத்தகைதாரருக்கு இப்பேரூராட்சியின் மூலம் கீழ்க்கண்ட விவரப்படி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்ற அறிக்கையினையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்து கீழ்க்கண்ட விவரத்தினையும் தெரிவித்துள்ளார்.

| வ.எண். | கடை எண். | நிதி ஆண்டு | ஆண்டு வாடகை மொத்தம் ரூ. | தள்ளுபடி மாதங்கள் | தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 20 | 2020-2021 | 31,930 | 04/2020 முதல் 05/2020=2 மாதங்கள் | 5,320 |
| 2 | 21 | 2020-2021 | 31,640 | 04/2020 முதல் 05/2020=2 மாதங்கள் | 5,270 |
| 3 | 20 | 2020-2021 | 42,516 | 06/2020 முதல் 08/2020 மற்றும் 05/2021 மற்றும் 06/2021=5 மாதங்கள் | 13,571 |
| 4 | 21 | 2021-2022 | 42,148 | 06/2020 முதல் 08/2020 மற்றும் 05/2021 மற்றும் 06/2021=5 மாதங்கள் | 13,451 |

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 24.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. S. பிரபு (எ) பிரபுகுமார் என்பவர் 24.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. இருப்பினும் மனுதாரர் இம்முறை நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ள 21.07.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நான் மேச்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் மீது கடந்த 20.05.2024 அன்று தங்களது முறைமன்ற நடுவம் அலுவலக முகவரிக்கு சமர்ப்பித்த புகார் மனுவில் தமிழக அரசால் கொரோனா பேரிடரின் போது மேச்சேரி பேரூராட்சி அலுவலகத்திற்கு சொந்தமான கடைகளை ஏலத்தில் எடுத்து நடத்தி வந்தேன். அப்போது கடைகள் ஆறுமாத காலத்திற்கு திறப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த காலத்திற்கு தமிழக அரசு இரண்டு அரசாணை நிலை எண். 298/2021 மற்றும் 337/2023 என்ற உத்தரவின் மூலம் கடைகளுக்கு கட்டியிருந்த வாடகையினை தள்ளுபடி செய்ய வழிவகை செய்யப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் எனக்குரிய தள்ளுபடி தொகையை மேச்சேரி பேரூராட்சி அலுவலர் வழங்காமல் காலம் தாழ்த்தி வந்த காரணத்தினால் நான் எனக்குரிய பரிகாரம் தேடி தங்கள் அலுவலகத்திற்கு புகார் மனு அனுப்பியிருந்தேன். அம்மனு 09/பேரூ./2024 எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் நடப்பு நிதியாண்டில் நான் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய கடை வாடகை குத்தகையில் எனக்குரிய தள்ளுபடி தொகையினை ஈடு செய்து கொண்டு எஞ்சியுள்ள தொகையினை செலுத்தும்படி பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து முறையாக தகவல் கடிதம் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் நான் மீதியுள்ள தொகையினை செலுத்தி எனக்குரிய கணக்கை முடித்துக்கொண்டேன். எனவே தாங்கள் எனது இந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஏற்கனவே நான் அனுப்பியிருந்த புகார் மனுவின் மீது யாதொரு நடவடிக்கையும் எடுக்க அவசியம் இல்லையென்று தங்களுக்கு முழு சம்மதத்துடன் ஒப்புதல் தெரிவிக்கின்றேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரர் மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. தி. சோமசுந்தரம் என்பவர் 24.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்: அதில் –

- சேலம் மாவட்டம், மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய காலியிட கடை எண். 20 மற்றும் 21 ஆகியவற்றினை இறுதியாக 2009-10ஆம் ஆண்டில் குத்தகைக்கு ஏலம் விடப்பட்டு, ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கு 1 முறை ஆண்டு வாடகையில் 15 சதவீதம் உயர்த்தி புதுப்பித்து வழங்கப்பட்டு வருகிறது.

- மேற்காணும் கடை எண். 20 மற்றும் 21 ஆகிய கடைகளை மனுதாரர் திரு. S. பிரபு (எ) பிரபுகுமார் என்பவரால் குத்தகைக்கு எடுத்து நடத்தப்பட்டு வரும் நிலையில், கொரோனா பேரிடர் காலத்தில் ஊரடங்கு காலமான 01.06.2020 முதல் 31.08.2020 மற்றும் 01.05.2021 முதல் 30.06.2021 வரை கடைகள் மூடப்பட்டதால் (Lockdown) உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளின் குத்தகை மற்றும் வாடகைத் தொகை மேற்படி 5 மாத காலங்களுக்கு தள்ளுபடி செய்து அரசாணை (டி) எண். 337, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 16.06.2023-ல் ஆணை வெளியிடப்பட்டது. இதன் அடிப்படையில், மனுதாரர் கடை எண். 20 மற்றும்

21க்கான 5 மாத காலத்திற்கான மொத்த குத்தகை தள்ளுபடி தொகையான ரூ.27,765-ஐ திரும்ப வழங்கப்படவில்லை என புகார் தெரிவித்திருந்தார்.

- மேற்காணும் அரசாணையின்படி, மனுதாரரால் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள கடை எண். 20 மற்றும் 21 ஆகிய கடைகளுக்குரிய 5 மாதங்களுக்கான மொத்த குத்தகை தள்ளுபடி தொகை ரூ.27,022/- என கணக்கிடப்பட்டு, அத்தொகையினை மனுதாரரால் செலுத்தப்பட வேண்டிய 2024-25ஆம் ஆண்டிற்கான குத்தகை தொகையில் ஈடு செய்யப்பட்டு, எஞ்சியுள்ள தொகை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. இதனை மனுதாரரும் முழுமனதுடன் ஆமோதித்துள்ளார் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் 21.07.2025 நாளிட்ட கடிதம் மற்றும் எதிர்மனுதாரரான மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

சேலம் மாவட்டம், மேச்சேரி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. S. பிரபு (எ) பிரபுகுமார் என்பவர் தனது 20.05.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய காலியிட கடை எண். 20 மற்றும் 21-ஐ குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகின்ற நிலையில், கொரோனா பேரிடர் காலத்தில் கடை நடத்த அனுமதி மறுக்கப்பட்டது என்றும், 2020-ல் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை 3 மாதங்கள் மற்றும் 2021-ல் மே மற்றும் ஜூன் வரை ஆகிய 5 மாதங்கள் கடைகள் மூடப்பட்டதால் (Lockdown) அரசாணை (நிலை) எண். 337 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 16.06.2023-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி மேற்காணும் 5 மாதங்களுக்கான குத்தகை தொகையினை மனுதாரருக்கு தள்ளுபடி செய்யவில்லை எனத் தெரிவித்து மேற்படி நிவாரணத் தொகையினை பெற்று வழங்க கோரியுள்ளார்.

மேற்காணும் அரசாணையின் அடிப்படையில் மனுதாரரால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கடை எண். 20 மற்றும் 21 ஆகிய கடைகளுக்குரிய 01.06.2020 முதல் 31.08.2020 வரை மற்றும் 01.05.2021 முதல் 30.06.2021 வரை ஆகிய 5 மாதங்களுக்கான தள்ளுபடி செய்யப்பட வேண்டிய மொத்த குத்தகை தொகை ரூ.27,022 என கணக்கிடப்பட்டு, அதனை மனுதாரர் 2024-25ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தொகையில் ஈடு செய்து மீதி தொகையினை செலுத்தக்கோரி மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் 04.12.2024 நாளிட்ட அறிவிப்பு ந.க.எண். 46/2024-ல் மனுதாரருக்கு வழங்கப்பட்டு உள்ளதை செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணம், அவரது அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும் 5 மாத கால மொத்த தள்ளுபடி குத்தகைத் தொகையினை 2024-25ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய தொகையில் ஈடு செய்யப்பட்டுள்ளதை மனுதாரரும் முழுசம்மதம் தெரிவித்துள்ளார் என்பதை மனுதாரரின் 21.07.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக அறிய வருகிறது.

இந்நிலையில் மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவற்றை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S. பிரபு (எ) பிரபுகுமார்,
த/பெ. சிவசாமி,
குக்கல்பட்டி காட்டுவளவு,
மேச்சேரி அஞ்சல், மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
மேச்சேரி சிறப்புநிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்